ஹொகேனக்கல் நீர்மின் திட்டம்.

* வினா எண் 513— திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா]

(அ) ஹொகேனக்கல் நீர் மின் திட்டம் பற்றிய நிபுணர்களின் கருத்து அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

* வினா எண் 514— திரு. ஜே. ஜேம்ஸ், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஹொகேனக்கல் மின் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

(ஆ) மத்திய அரசு இத்திட்டத்தை அமுல்படுத்த முன் வந்தது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (ஆ) ஹொகேனக்கல் நீர் மின் திட்டம் காவிரி ஆற்றிலிருந்து தமிழ்நாட்டுக்கு இறுதியாகக் கிடைக்கக்கூடிய நீரளவுடன் இணைக்கப்பட்டுள்ளதால் இத்திட்டத்தை இது வரை செயல்படுத்த இயலவில்லை. எனினும், இத்திட்டத்தை காவிரி நீர்ப் பிரச்னையுடன் இணைக்காமல் தனியே நிறைவேற்றுவதற்கான தொழில் நுட்ப சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து பேசலாமென்று 23—5—1978 அன்று கர்னாடக மாநிலத்தோடு அமைச்சர்கள் மட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தையின்போது தீர்மானிக்கப்பட்டது. இதற்கிணங்க, பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.

இப்படி இத்திட்டத்தை காவிரி நீர்ப் பிரச்சினையுடன் இணைக்காமல் தனியே நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டுமென்று மத்திய அரசும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.